<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>
**<u>S.C. No.147/2017</u>**

அ.சா.8 தேதி. 20.11.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | த/பெ. | வடிவேல் |
| வயது | 45 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கீழமூளை | தாலுக்கா | குத்தாலம் |

(எதிரிகள் ஆஜர் இல்லை. அவருக்கு பா.ச.ந.ச சட்ட பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் குத்தாலம் தாலுக்கா, கீழமூளை என்ற கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு எனது ஊரைச்சேர்ந்த வீராசாமி மகன் ஜெயராஜை தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை</u>**:–

27.02.2016ஆம் தேதி காலை 08.00 மணிக்கு நானும் கோடிமங்கலம் கீழத்தெருவில் வசித்து வரும் விராசாமி மகன் ஜெயராஜ் என்பவரும் அவருடைய வீட்டு வாசலில் நின்று விவசாய வேலை சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது நடந்த சம்பவம் தொடர்பாக பாலையூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் நாங்கள் நின்ற இடத்தில் வந்து விசாரணை செய்துகொண்டிருந்தார்கள் அப்போது நானும், ஜெயராஜ் என்பவரும் அங்கு நின்றபோது போலீசார் எங்களை விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் ஜெயராஜ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு எதிரிகளும் நானும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் தனக்கே தெரிந்த காரணத்திற்காகவும் மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.